DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.281/2023**

Deposition of witness for Prosecution அ.சா.4

| | | |
|---|---|---|
| பெயர் | : | காளிமுத்து |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | மாரிமுத்து |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 23.06.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கண்ணரியேந்தலில் வசித்து வருகிறேன். 01.08.2020 ம் தேதி கடம்பாகுடி காளி கோவிலுக்கு சாமி கும்பிட சென்றபோது தேவகோட்டை தாலுகா போலீசார் சண்டை நடந்த இடத்தில் விசாரணை செய்து மேப் போட்டு எழுதிக் கொண்டு இருந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி பார்வை மகஜரில் உள்ள 2 ம் கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். என்னிடம் கையெழுத்து வாங்கிய போலீசார் என்ன நிலை என்று எனக்கு தெரியாது. கையெழுத்து போட்ட சமயத்தில் அந்த இடத்தில் நான் மட்டும்தான் இருந்தேன். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.